**நவம்பர் – 21**

# TNPSC துளிகள்

- நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையுடன் ஓய்வூதிய இயக்குநரகம் மற்றும் அரசு தரவு மையத்தை ஒருங்கிணைக்கச் செய்வதற்கு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் 76வது தேசிய சைக்கிள் ஓட்டப் பந்தய சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.
- சென்னை-திருச்சி வழித் தடத்தில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) / அழுத்தப் பட்ட இயற்கை எரிவாயு (CNG) மூலம் இயங்கும் சில பேருந்துகளை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கி (SBI) ஆனது, 1.25 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன் பெற திட்டமிட்டுள்ள நிலையில், இது 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் நிதித் துறையில் பெறப் பட்ட மிகப்பெரிய டாலர் மதிப்பிலான கடனாக இருக்கும்.
- லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டுச் சபை (LAHDC) ஆனது, ஆதித்யா மேத்தா அறக் கட்டளை (AMF) உடன் இணைந்து உலகின் முதல் உயரமான இடத்திலான மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்தை நிறுவியுள்ளது.
- CSIR-தேசிய அறிவியல் தொடர்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி கல்வி நிறுவனம் மற்றும் குருகிராம் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து குருகிராம் பல்கலைக் கழகத்தில் பாரம்பரிய அறிவின் தொடர்பு மற்றும் பரவல் (CDTK-2024) பற்றிய சர்வதேச மாநாட்டை நடத்தின.
- புது டெல்லியில் நடைபெற்ற முதலாவது போடோலாந்து மஹோத்சவத்தினை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) ஆனது முதன்முறையாக சபரிமலை பக்தர்களின் யாத்திரைக்காக என உள்ளூர் வானிலை முன்னறிவிப்பு அமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- உள்ளூர்வாசிகளின் உடல்நலம் மற்றும் நலன்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தூத்துக்குடி ஆலையை மீண்டும் திறக்க வேண்டும் என்ற வேதாந்தாவின் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
    - 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக வேதாந்தா மறு ஆய்வு மனு தாக்கல் செய்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## அதிக விலையிலான பிந்தைய நாள் மதிப்பு அடிப்படையிலான சந்தை

- மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (CERC) ஆனது 2023-24 ஆம் ஆண்டு இந்தியாவில் குறுகிய கால மின்சாரச் சந்தை குறித்த அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- CERC ஆனது 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், அதிக விலையிலான பிந்தைய நாள் மதிப்பு அடிப்படையிலான சந்தையினை (HP-DAM) அறிமுகப்படுத்த தனது ஒப்புதலை அளித்தது.
- தற்போதுள்ள விலை உச்ச வரம்பு மீதான ஒரு காரணமாக பிந்தைய நாள் மதிப்பின்

அடிப்படையிலான சந்தையில் பங்கேற்க முடியாத மிகவும் அதிக விலை உருவாக்கத் துறைகளுக்காக பிரத்யேகமாக அர்ப்பணிக்கப்பட்ட சந்தைப் பிரிவு ஆனது அறிமுகப் படுத்தப் பட்டது.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (Tangedco) ஆனது, மின் பரிமாற்றங்களில் அதிக விலையிலான பிந்தைய நாள் மதிப்பு அடிப்படையிலான சந்தையிலிருந்து மின்சாரத்தை அதிகம் வாங்கும் நிறுவனமாக இருந்தது.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்திய எரிசக்தி சந்தையில் அதிக விலையிலான பிந்தைய நாள் மதிப்பு அடிப்படையிலான சந்தை மூலம் பரிவர்த்தனை செய்யப்பட்ட மொத்த அளவு சுமார் 32.07 மில்லியன் அலகுகள் (MU) ஆகும்.
- இதில் TANGEDCO நிறுவனத்தின் பங்கு 20.98 MU அல்லது 65.43% ஆகும்.
- இந்த அறிக்கையின்படி, TANGEDCO நிறுவனத்தின் சராசரி கொள்முதல் சக்தியானது ஓர் அலகுக்கு 17.65 ரூபாயாக இருந்தது.
- மாநிலத்தின் மின்சாரத் தேவையானது மே 02 ஆம் தேதியன்று 20,830 மெகாவாட் என்ற வரலாறு காணாத வகையில் புதிய சாதனையை எட்டியது.
- ஏப்ரல் 30 ஆம் தேதியன்று தினசரி நுகர்வு 454.32 MU என்ற புதிய உச்சத்தை எட்டியது.

Table-24(d): Major Buyers of Electricity in the High Price Day Ahead Market of IEX, 2023-24

| S.No. | Name of Buyer | State/ Regional Entity | Buy Volume (MU) | Percentage of the Total Volume Transacted in IEX | Weighted Average Buy Price (₹/kWh) |
|---|---|---|---|---|---|
| 1 | TANGEDCO | Tamil Nadu | 20.98 | 65.43% | 17.65 |
| 2 | CESC | West Bengal | 4.22 | 13.15% | 16.41 |
| 3 | APCPDCL | Andhra Pradesh | 3.00 | 9.36% | 15.00 |
| 4 | WBSEDCL | West Bengal | 1.70 | 5.30% | 16.92 |
| 5 | Green Valley Industries Limited | Meghalaya | 1.57 | 4.88% | 13.11 |
| 6 | BSPHCL | Bihar | 0.40 | 1.24% | 19.31 |
| 7 | CSPDCL | Chhattisgarh | 0.16 | 0.49% | 19.30 |
| 8 | Eon Kharadi Infrastructure Private Ltd SEZ 1 | Maharashtra | 0.05 | 0.15% | 13.74 |
| 9 | TPCL | Maharashtra | 0.001 | 0.004% | 13.80 |
| 10 | Hills Cement Company Ltd | Meghalaya | 0.0001 | 0.0002% | 20.00 |

## ‘நிபுணி’ தொழில் ஆயத்தத் திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசு கல்வித் துறையானது சமீபத்தில் “நிபுணி” எனப்படும் தொழில் ஆயத்த திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- இது அவதார் மனித மூலதன அறக்கட்டளை அமைப்பால் உருவாக்கப் பட்டது.

- இது 12வது “உத்யோக் உத்சவ்” நிகழ்வின் ஒரு பகுதியாகும்.
- பெரு நிறுவனங்கள் நிறைந்த இந்தியாவிற்கான மிகவும் தன்னிறைவான பணியாளர் வளங்களை உருவாக்கும் திறன் கொண்ட கல்லூரிப் பெண்களைத் தொழில் துறைக்கு ஆயத்தப் படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## வடுவூர் பறவைகள் சரணாலயம்




- வடுவூர் பறவைகள் சரணாலயம் ஆனது திருவாரூர் மாவட்டத்தில் , தஞ்சாவூர் - கோடியக் கரை மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.
- வலசை போகும் பறவைகளுக்கான வாழ்விடத்தினைத் தயார் செய்வதற்காக வேண்டி இங்கு ஊடுருவல் தாவர இனங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

- இது இப்பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய நீர்ப்பாசன ஏரியாகும்.
- நீர் வெங்காயத் தாமரை, சீமைக் கருவேலம் மற்றும் காட்டு ஆமணக்கு போன்ற ஊடுருவல் இனங்கள் இந்தப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ளன.

# தேசியச் செய்திகள்

## 'Know Your Medicine' செயலி

- மத்திய அரசானது தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு முகமையின் (NADA) 'Know Your Medicine (KYM)' செயலியை ஏற்குமாறு நாடு தழுவிய கோரிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- இது விளையாட்டுகளில் ஊக்கமருந்துப் பயன்பாட்டிற்கு எதிரான போராட்டத்தை மிக நன்கு வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு இதற்கு எதிராக குரல் கொடுக்குமாறு விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் ஒட்டு மொத்த விளையாட்டுச் சமூகத்தையும் வலியுறுத்துகிறது.
- இந்தப் புதுமையான முயற்சியானது, விளையாட்டு வீரர்களுக்கு என்று முக்கியமானத் தகவல்களை வழங்கி, அவர்கள் மிகவும் அலட்சியமாக ஊக்கமருந்துகளை எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கவும் ஒரு நியாயமான விளையாட்டுத் துறையை மிகவும் நன்கு பேணவும் உதவுகிறது.
- 2005 ஆம் ஆண்டில் ஊக்கமருந்து இல்லாத விளையாட்டுத் துறையினை உருவாக்கச் செய்வதற்காக இந்திய அரசினால் NADA நிறுவப்பட்டது.




## இரட்டை ஒப்புதல் முறையில் இருந்து விலக்கு

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் ஆனது, தற்போது 'வெண்மைப் பிரிவு-மாசு ஏற்படுத்தாத' துறையானது இரண்டு முக்கிய அனுமதிகளைப் பெறாமல் தொழிற் சாலைகளை நிறுவவும் இயக்கவும் அனுமதிக்கிறது.
- விதிகளுக்கான இணக்கச் சுமையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் காரணம் காட்டி 'மாசுபாடு ஏற்படுத்தாத' பிரிவுகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- இரட்டை ஒப்புதல் முறையில் சுற்றுச்சூழல் அனுமதி (EC) மற்றும் புதியத் தொழில்களை

அமைப்பதற்கான ஒப்புதல் (CTE) ஆகியவை அடங்கும்.

- குறைந்தபட்ச அல்லது மிகக் குறைவான மாசுபாட்டை ஏற்படுத்துவதாக அதிகாரப் பூர்வமாக மதிப்பிடப்பட்ட தொழிற்சாலைகள் இத்துறை அமைச்சகத்தின் வெண்மைப் பிரிவிற்குள் அடங்கும்.
- அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப்பூர்வப் பட்டியலில் இது போன்று மொத்தம் 39 தொழில் துறைகள் உள்ளன.




## சர்வதேசச் செய்திகள்

### வெப்பமண்டலப் புயல் சாரா – ஹோண்டுராஸ்




- மேற்கு கரீபியன் கடலில் உருவான சாரா என்ற ஒரு வெப்பமண்டலப் புயல் ஆனது, ஹோண்டுராஸின் வடக்குக் கடற்கரையில் கரையை கடந்தது.
- அட்லாண்டிக் பெருங்கடல், கரீபியன் கடல் மற்றும் மெக்சிகோ வளைகுடாவில் புயல் உருவாகும் காலம் ஆனது பொதுவாக ஜூன் 01 முதல் நவம்பர் 30 வரை ஆகும்.

- புயல் உருவாக்கத்தினைத் தூண்டுவதற்கு, கடல் வெப்பநிலை குறைந்தபட்சம் 79 டிகிரி பாரன்ஹீட் (26 செல்சியஸ்) ஆக இருக்க வேண்டும்.
- 1991 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான 30 ஆண்டுகள் காலத்தின் அடிப்படையில், நவம்பர் மாதத்தில் பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு வெப்பமண்டலப் புயல் உருவாகும்.

## பெருவில் அமைக்கப்பட்டுள்ள மாபெரும் சீனத் துறைமுகம் – சான்கே

- சீன அதிபரான ஜி ஜின்பிங், பெய்ஜிங்கின் 1.3 பில்லியன் டாலர் முதலீட்டில் பெருவில் அமைக்கப் பட்டுள்ள ஒரு மாபெரும் ஆழ்கடல் துறைமுகத்தினைத் திறந்து வைத்தார்.
- அண்டை நாடான பிரேசிலுடனான சேவை அணுகலைப் பெறுவதற்காக என்று சீனா இத்தகையப் பணிகளை மேற்கொண்டு வருவதோடு, பிரேசிலின் ஏற்றுமதிகளை கொண்டு செல்வதற்காக புதிய இரயில் பாதையையும் அமைக்கத் திட்டமிடப் பட்டு உள்ளது.
- இந்த இரயில் பாதை திட்டத்திற்கு 3.5 பில்லியன் டாலர் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.




## இன்ஃப்ளுயன்ஸா பாதிப்பு போக்குகள் மற்றும் சுகாதார ஆலோசனை 2024




- சுமார் 75.4% நோயாளிகள் இன்ஃப்ளுயன்ஸா போன்ற ஒரு நோயால் பாதிக்கப் பட்டுள்ளதை அடுத்து, இன்ஃப்ளுயன்ஸா A மற்றும் B வகை வைரஸ்கள் மிகவும்

முதன்மையானப் பாதிப்பு அச்சுறுத்தலாக உள்ளன.

- இன்ஃப்ளுயன்ஸா A (H1N1) வகை வைரஸ்கள் 44% பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
- இன்ஃப்ளுயன்ஸா B மற்றும் பிற வகைகளும் இது போன்றப் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன, ஆனால் இவற்றால் ஏற்பட்டப் பாதிப்புகள் மிகவும் குறைந்த அளவிலேயே பதிவாகி உள்ளன.
- 9% பாதிப்புகளில் மனித சுவாசநுண்குழல் அழற்சி வைரஸ் (RSV) A மற்றும் B வகையின் பாதிப்பு ஆனது பதிவாகியுள்ளது என்பதோடு இது மிகவும் லேசான நோய்ப் பாதிப்பு நிலையினை ஏற்படுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## சான்யே-6 – நிலவு மாதிரி தரவு




- நிலவின் தொலைதூரப் பகுதியிலிருந்து சீன ஆய்வுக்கலம் கொண்டு வந்த நிலவு மண் மற்றும் பாறை மாதிரிகளின் முதல் விரிவான பகுப்பாய்வுகளை அறிவியலாளர்கள் வெளியிட்டுள்ளனர்.
- இந்த மாதிரியில் உள்ள எரிமலைப் பாறையானது சுமார் 2.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையது.
- ஆளில்லா ஆய்வுக் கலத்தின் தரையிறங்கும் தளம் ஆனது அந்த காலக் கட்டத்தில் எரிமலை வெடிப்புகள் அவ்வப் போது ஏற்பட்ட பகுதியாக இருந்ததைக் குறிக்கிறது.
- நிலவின் தொலை தூரப் பகுதியில் உள்ள பசால்ட் பாறையின் வயது 3 பில்லியன் ஆண்டுகளுக்கும் மேலானது.
- 2020 ஆம் ஆண்டில் சீனாவின் சான்யே-5 (சாங்'கே) என்ற நிலவு ஆய்வுக் கலத்தினால் சேகரிக்கப் பட்ட அண்மைத் தொலைவு பக்கப் பகுதியின் மண் மாதிரிகள் 2 பில்லியன் ஆண்டுகள் பழமையானவை எனக் கண்டறியப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அதிக பசுமை இல்ல வாயு உமிழ்வு நகரங்கள் 2024

- ஏழு மாநிலங்கள் அல்லது மாகாணங்கள் ஆனது 1 பில்லியன் மெட்ரிக் டன் பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றுகின்றன என்ற நிலையில் இதில் டெக்சாஸைத் தவிர

மற்ற அனைத்து மாகாணங்களும் சீனாவில் அமைந்துள்ளன.

- பூமியின் மொத்தக் கார்பன் டை ஆக்சைடு மற்றும் மீத்தேன் மாசுபாடு ஆனது சுமார் 0.7% அதிகரித்து 61.2 பில்லியன் மெட்ரிக் டன்களாக இருந்தது என்பதோடு அவற்றின் உமிழ்வு மிகக் குறுகிய காலமே இருந்தாலும், கூடுதல் ஆற்றல் வாய்ந்த மீத்தேன் 0.2% உயர்ந்துள்ளது.
- சுமார் 256 மில்லியன் மெட்ரிக் டன் பசுமை இல்ல வாயு உமிழ்வுடன் ஷாங்காய் நகரம் அனைத்து நகரங்களையும் முந்தியுள்ளதோடு கொலம்பியா அல்லது நார்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த நகரங்களை விட அதிகமான உமிழ்வினை வெளியிடுகிறது.
- சீனா, இந்தியா, ஈரான், இந்தோனேஷியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் 2022 முதல் 2023 ஆம் ஆண்டு வரை பதிவான உமிழ்வு மிகப்பெரிய அளவில் அதிகரித்துள்ளது.
- வெனிசுலா, ஜப்பான், ஜெர்மனி, ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா ஆகிய சில நாடுகளில் மாசுபாடு பெருமளவு குறைந்துள்ளது.




## COP 29 - உலகளாவிய ஆற்றல் செயல்திறன் கூட்டணி




- COP29 மாநாட்டின் போது ஒரு "உலகளாவிய ஆற்றல் செயல் திறன் கூட்டணியை" நிறுவுவதற்கான மிக இலட்சிய மிக்கதொரு முன்னெடுப்பினை ஐக்கிய அரபு அமீரகம்

வெளியிட்டது.

- இந்த நடவடிக்கையானது 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய ஆற்றல் செயல் திறன் விகிதங்களை இரட்டிப்பாக்குவதையும், கணிசமான உமிழ்வு குறைப்புகளுக்கு பெரும் பங்களிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகம் ஆனது, தனது ஆற்றல் செயல்திறன், தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துவது மற்றும் தனியார் துறையுடன் பயனுள்ள கூட்டாண்மை மாதிரிகளை உருவாக்குதல் ஆகியவற்றில் அதன் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் கூட்டணிக்குத் தலைமை தாங்க திட்டமிட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## தேசியப் பத்திரிகை தினம் - நவம்பர் 16




- இது 1966 ஆம் ஆண்டு இதே தேதியில் நடைமுறைக்கு வந்த இந்தியப் பத்திரிக்கை சபையின் (PCI) துவக்கத்தினை நினைவு கூருகிறது.
- PCI ஆனது 1965 ஆம் ஆண்டின் பத்திரிக்கைச் சபை சட்டத்தின் கீழ் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக நிறுவப்பட்டது.
- நாட்டில் பத்திரிகை நெறிமுறைகளைப் பேணுவதன் மூலம் பத்திரிகைச் சுதந்திரத்தை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சபையானது, பத்திரிகை நெறிமுறைகளுக்கானக் கண்காணிப்புக் குழுவாகச் செயல்படுகிறது மற்றும் ஊடகங்கள் தேவையற்றச் செல்வாக்கு அல்லது வெளிப்புற நெருக்கடிகள் இல்லாமல் செயல்படுவதை உறுதி செய்கிறது.

## சாலைப் போக்குவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலக நினைவு தினம் - நவம்பர் 17

- இது 1993 ஆம் ஆண்டில் RoadPeace என்ற அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- இந்தத் தினம் ஆனது 2005 ஆம் ஆண்டில், ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையும் உலகளாவியத் தினமாக அனுசரிக்கப்படும் என்று

ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Remember. Support. Act” என்பதாகும்.




## உலக AMR விழிப்புணர்வு வாரம் - நவம்பர்18/24




- நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு (AMR) என்பது உலகளாவியப் பொது சுகாதாரத்திற்கு பெருகிய அளவில் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது.
- இது மனித மற்றும் விலங்கு ஆரோக்கியம், உணவு உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழலில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Educate. Advocate. Act now" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★